TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074731

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2023** FIR No.: மு.த.அ. எண் **07/2023** Date: நாள் **24.05.2023**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் **24.05.2023**
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **24.05.2023** Time : நேரம் **17.30 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** Time : நேரம் **19.50 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **(Approximately) 100 Kms, North East**
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி **AE, TANGEDCO, Vembakkam, Tiruvannamalai Dt.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.B.Sakthivel**
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Baskaran**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-26**
(d) Nationality : நாட்டினம் **Indian**
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Private Employee**
(g) Address : முகவரி **No.280, Main Road, Alanthankal Village,Sumangali Post, Vembakkam Tk, Tiruvannamalai District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**AO: Tr. Ajeeth Prasath, Assistant Engineer, TANGEDCO, Vembakkam, Tiruvannamalai Dt.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : -----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u>. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் 24.05.2023 ஆம் தேதி 17.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரார் திரு.B.சக்திவேல், த/பெ.பாஸ்கரன் எண்: 280, மெயின் ரோடு, ஆலந்தாங்கல் கிராமம், சுமங்கலி அஞ்சல், வெம்பாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர்:B.சக்திவேல், வயது.26/2023, த/பெ. பாஸ்கர், நெ.280, மெயின் ரோடு, ஆலந்தாங்கல் கிராமம், சுமங்கலி அஞ்சல், வெம்பாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர்: காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. ஐயா, நான் திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுக்கா ஆலந்தாங்கல் கிராமத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் தகப்பனார் பாஸ்கர் எங்களுக்கு சொந்தமாக உள்ள ஆடுகளை வளர்த்து பராமரித்து மற்றும் விவசாய கூலி வேலை செய்து வருகிறார். எனது தங்கை ஜெயசக்தி B.Sc Zoology படிப்பு முடித்துள்ளார். அவருக்கு திருமணம் ஆகி விட்டது. நான் Diploma ECE முடித்து கடந்த 3 ஆண்டுகளாக ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள சுங்குவார்சத்திரத்தில் அமைந்துள்ள தனியார்

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B. [signature]
24.05.2023

[signature]
24.05.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.05.2023 at 2130 hrs

Name: பெயர் ....S. VELMURUGAN
(DSP, VAC
Rank: நிலை ....TIRUVANNAMALAI DT) ....No. எண் ..........

Mobile Manufacture நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். செய்யார் பதிவு மாவட்டம் வெம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் வாயிலாக கடந்த 31.12.2018-ல் என்னுடைய பெயரில் கிரையம் பெற்ற, DTCP எண்: 808(R)/2018-ன் படி அங்கீகாரம் பெற்ற ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி நகர் மனைப்பிரிவில் வீடு கட்ட வங்கியில் கடன் பெற்று சிறிய மெத்தை வீடு கட்டிக்கொண்டுள்ளேன். அதில் 7 அடி உயரம் வரை கட்டுமான வேலை முடிந்துள்ளது. மேற்கொண்டு வீடு கட்ட வீட்டின் மேற்புறம் செல்லும் மின்சார கம்பிகளை சற்று வெளிபுறமாக மாற்றி அமைத்தால் மட்டுமே மேற்படி வீடு கட்ட முடியும் என்பதால் கடந்த பிப்ரவரி மாத இறுதியில் வெம்பாக்கத்தில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று இது சம்பந்தமாக உதவி மின்பொறியாளர் திரு. அஜித் பிரசாத் அவர்களை அனுகி என் வீடு கட்டுமான பணி நடைபெறும் வீட்டிற்கு மேற்புறமுள்ள மின்சார கம்பிகளை அகற்ற மனு ஒன்று அளித்திருந்தேன். இது சம்மந்தமாக கடந்த ஏப்ரல் 27-ந் தேதி உதவி மின்பொறியாளர் அலுவலகம் வெம்பாக்கம் அவர்களை அனுகியபோது திட்ட மதிப்பீடு தயார் செய்து அதற்கு AD அவர்களின் ஒப்புதல் பெற வேண்டும் அதற்காக ரூ.50,000/- கட்டணமாக கொடுக்க வேண்டும் என்று கூறியதின் பேரில் அவரிடம் ரூ.50,000/-ஐ அன்றே கொடுத்துவிட்டேன். அதன்பின்னர் அதற்கான ரசீது பெற பலமுறை அவருடைய அவலுவலகத்திற்கு சென்று அவரிடம் கேட்டுப்பார்த்தேன் அவர் AD ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளேன் வந்த உடன் பில் போட்டுவிடலாம் என சொல்லி அனுப்பிவிடுவார். கடந்த 17.05.2023 அன்று மீண்டும் உதவி மின்பொறியாளர் வெம்பாக்கம் அலுவலகம் சென்று திரு.அஜித் பிரசாத் அவர்களை சந்தித்து எந்த வேலையும் நடைபெறவில்லை, ரசீதும் இந்நாள் வரை கொடுக்கவில்லை என்று நான் கேட்டதற்கு அவர் AD ஒப்புதல் அளித்துள்ளார் என்றும் திட்ட மதிப்பீடு தொகை ரூ.37,780/-ஐ SE/TANGEDCO/T.V.MALAI என்ற பெயரில் Demand Draft எடுக்கவேண்டும் என்றும் சொன்னார். அதற்கு நான் பணம் உங்களிடம் தானே இருக்கின்றது என்று சொன்னேன் அதற்கு அவர் இங்கேயே இரு, ATM-ல் இருந்து பணம் எடுத்து வருகிறேன் என்று சொல்லி சென்று சிறிது நேரம் கழித்து வந்து என்னிடம் ரூ.39,000/- கொடுத்து இதை உன் வங்கி கணக்கில் வரவு வைத்து நான் சொன்னதுபடி DD எடுத்து கொடுக்கவும் என்று சொன்னார். நானும் அன்றே எனது இந்தியன் வங்கி கணக்கில் வரவு வைத்து, நேரமாகிவிட்டதால் மறுநாள் 18.05.2023 அன்று ரூ.37,780/-ஐ Demand Draft எடுத்து உதவி மின்பொறியாளர் திரு.அஜித் பிரசாத்தை சந்தித்து கொடுத்துவிட்டேன். அவரும் இரண்டு தினங்களில் வந்து வேலை செய்வதாக சொன்னார். நானும் அவரிடம் இருந்து வரவேண்டிய மீதி தொகை ரூ.11,000/-ஐ கேட்டதற்கு வேலை முடியட்டும் பிறகு பார்க்கலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டார். இன்று 24.05.2023 காலை உதவி மின்பொறியாளர் திரு.அஜித் பிரசாத் மற்றும் மின்வாரிய ஊழியர்கள் சுமார் 10 நபர்களுக்கு மேலாக நான் வீடுகட்டும் இடத்திற்கு வந்து ஒரு மின்கம்பத்தை வைத்துவிட்டு பின்னர் வேலை செய்ய வருவோம் என்று சொன்னார். நான் அதற்கு இன்று வேலை செய்தால் நன்றாக இருக்கும் என்று சொன்னேன் அதற்கு அவர் மேற்கொண்டு வேலை செய்ய வேண்டுமென்றால் எனக்கு ரூ.2,000/- இலஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் எனக்கு நீங்கள்

கொடுக்க வேண்டிய மீத தொகை ரூ.11,000/- உங்களிடம் தானே உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் இந்த வேலைக்காக அந்த தொகையை AD அவர்களுக்கு ரூ.6,000/-மும் எனக்கு ரூ.5,000/-மும் லஞ்சமாக எடுத்துக்கொண்டோம் என்று கூறி இம்மாதிரியான வேலைகளுக்கு நாங்கள் லஞ்சமாக பணம் வாங்குவது வழக்கம்தான் என்றார். நான் அதற்கு என் தகப்பனார் ஆடுகளை மேய்த்து பிழைப்பு நடத்துகிறார் நானும் படித்து தனியார் கம்பனியில் பணிபுரிந்து வங்கியில் கடன் பெற்றுதான் வீடு கட்டுகிறேன் என்னால் மீண்டும் எந்த தொகையும் கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு அவர் கூடுதலாக ரூ.2,000/- லஞ்சமாக தனக்கு கொடுக்க வேண்டும் என்றும் இல்லையெனில் இந்த வேலையை செய்யமுடியாது என்று கராராக கூறி சென்றுவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தால் என்னிடம் ரூ.2,000/- லஞ்சம் கேட்ட வெம்பாக்கம் உதவி மின்பொறியாளர் அஜித் பிரசாத் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டி எனக்கு தெரிந்த நபர் மூலம் மனு தயார் செய்து இன்று (24.05.2023) தங்களிடம் அளிக்கிறேன். இதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (Sd XXXXX) B.சக்திவேல், 24.05.2023.

Sir,

Received the complaint on 24.05.2023 at 17.30 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 24.05.2023 at 19.50 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.07/2023, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 24/05/2023. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai.

(signature)
24.05.2023
C.S. VELMURUGAN,
Deputy Superintendent of Police V&AC,
TIRUVANNAMALAI)